செ.வெ.எண்: 05 நாள்:03.09.2020

# கரூர் மாவட்டம்

## சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை மீறி கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மீது பெற்றோர் புகார் அளிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் தகவல்

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் ஜீலை 17-ல் பிறப்பித்த உத்தரவினை மீறும் வகையில் 40 சதவீதத்திற்கு மேல் கட்டணம் செலுத்துமாறு, பெற்றோரை வற்புறுத்தும் பள்ளிகள் மீது, பெற்றோர் புகார் தெரிவிக்கலாம்.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை பள்ளிகளுக்கு விளக்கும் வகையில் மெட்ரிக்பள்ளி இயக்குநரின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்ட தகவல்கள் அனைத்துப்பள்ளிகளுக்கும் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் மூலம் சுற்றறிக்கை வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, உயர்நீதிமன்ற உத்தரவை மீறி, 40 சதவீதத்திற்கு மேல், கட்டணம் செலுத்துமாறு பெற்றோரை வற்புறுத்தும் பள்ளிகள் மீது புகார் அளிக்க விரும்பும் பெற்றோர்கள் **ceokarurcomplaint@gmail.com** என்ற இ-மெயில் முகவரியிலோ அல்லது கரூர் முதன்மைக்கல்வி அலுவலக முகவரிக்கோ அனுப்பலாம் தங்கள் புகார்களை அளிக்கலாம்.

உயர்நீதிமன்ற உத்தரவை மீறும் வகையில் பள்ளிகள் செயல்படுவது கண்டறியப்பட்டால் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.